பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4
26 09 2024 6 45
வியாழக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள் -</u>

- உற்பத்திக்கான இந்தியா இயக்கம், வளர்ச்சியை அதிகரித்துள்ளதுடன் இளைஞர்களுக்கான வாய்ப்புகளையும் ஏற்படுத்தி உள்ளதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.
- தமிழகத்தில் கடந்த மூன்று ஆண்டுகளில் கூட்டுறவு வங்கிகள் மூலம் சுமார் 40 ஆயிரம் கோடி ரூபாய் அளவுக்கு பயிர்க்கடன் வழங்கப்பட்டுள்ளதாக மாநில கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு கே ஆர் பெரியகருப்பன் கூறியுள்ளார்.
- பசுமைத் தமிழகம் இயக்கத்தின் கீழ் மாநிலம் முழுவதும் 10 கோடி மரக்கன்றுகள் நடப்படும் என மாநில சுற்றுச்சூழல் துறை அமைச்சர் திரு மெய்யநாதன் தெரிவித்துள்ளார்.
- தமிழகத்தில் ஓரிரு இடங்களில் இன்று மிதமான மழை பெய்ய வாய்ப்பு உள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.
- செஸ் ஒலிம்பியாட்டில் தங்கம் வென்ற இந்திய அணியினருக்கு மூன்று கோடியே 20 லட்சம் ரூபாய் வழங்கப்படும் என இந்திய செஸ் கூட்டமைப்பு அறிவித்துள்ளது.

<u>*---- இனி விரிவான செய்திகள் ---*</u>

**[]<<<>>>[]**

உற்பத்திக்கான இந்தியா இயக்கம், வளர்ச்சியை அதிகரித்துள்ளதுடன் இளைஞர்களுக்கான வாய்ப்புகளையும் ஏற்படுத்தி உள்ளதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

இந்த இயக்கத்தின் பத்தாம் ஆண்டு நிறைவையொட்டி லிங்க்டு இன் சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள கட்டுரைப் பதிவில், உற்பத்தித் துறையில் இந்தியாவின் வளர்ச்சியை விரைவுபடுத்தவும், ஏற்றுமதியை அதிகரிக்கவும் 10 ஆண்டுகளுக்கு முன்பு இந்த இயக்கம் தொடங்கப்பட்டதை சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த இயக்கத்தின் தாக்கம் அனைத்துத் துறைகளிலும் சிறப்பாக உள்ளது என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

2014-ம் ஆண்டில், நாடு முழுவதிலும் இரண்டு மொபைல் உற்பத்திப் பிரிவுகள் மட்டுமே செயல்பட்டு வந்ததாகவும், இன்று அந்த எண்ணிக்கை 200-ஆக உயர்ந்துள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

கைபேசி ஏற்றுமதி ஏழாயிரத்து 500 சதவீதம் அதிகரித்து, ஒரு லட்சத்து 20 ஆயிரம் கோடி ரூபாய் அளவிற்கு உயர்ந்துள்ளது என்று அவர் கூறியுள்ளார்.

எஃகு உற்பத்தி மற்றும் ஏற்றுமதியும் அதிகரித்துள்ளதாக தெரிவித்துள்ள அவர், புதுப்பிக்கத்தக்க எரிசக்தித் திறன் கடந்த 10 ஆண்டுளில் 400 சதவீதம் அதிகரித்துள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

பொம்மைகள் ஏற்றுமதி 239 சதவீதம் அதிகரித்துள்ளது என்றும் அவர் கூறியுள்ளார்.

வந்தே பாரத் ரயில்கள், ஏவுகணைகள், மின்னணுப் பொருட்கள் முதல் விண்வெளித் துறை வரை இந்தியாவின் உற்பத்தி அதிகரித்துள்ளதை அவர் விரிவாக எடுத்துரைத்துள்ளார்.

இதனை மேலும் வலுப்படுத்த அரசு உறுதிபூண்டுள்ளது என்றும், சொந்த தேவைகளை பூர்த்தி செய்வது மட்டுமின்றி, உலகின் தேவைகளுக்காகவும் உற்பத்தியை அதிகரிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்றும் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

**[]<<<>>>[]**

பிரதமர் திரு நரேந்திரமோடியை சந்திப்பதற்காக, முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின் இன்று புதுதில்லி செல்கிறார்.

மாலை சென்னை விமான நிலையத்திலிருந்து புதுதில்லி செல்லும் அவர், நாளை பிரதமரை அவரது அலுவலகத்தில் சந்தித்து பேசுகிறார்.

அப்போது தமிழக அரசின் கோரிக்கைகள் அடங்கிய மனுவை பிரதமரிடம் அவர் வழங்குகிறார்.

**[]<<<>>>[]**

தமிழகத்தில் கடந்த மூன்று ஆண்டுகளில் கூட்டுறவு வங்கிகள் மூலம் சுமார் 40 ஆயிரம் கோடி ரூபாய் அளவுக்கு பயிர்க்கடன் வழங்கப்பட்டுள்ளதாக மாநில கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு கே ஆர் பெரியகருப்பன் கூறியுள்ளார்.

கடலூர் மாவட்டம் கீரப்பாளையம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தின் புதிய பெட்ரோல் விற்பனை நிலையத்தை திறந்து வைத்து பேசிய அவர், கடந்த நிதியாண்டில் மட்டும் 16 ஆயிரத்து 500 கோடி ரூபாய் பயிர்க்கடன் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார்.

கூட்டுறவு சங்கங்கள் மூலம் மேலும் 50 பெட்ரோல், டீசல் விற்பனை நிலையங்கள் திறக்கப்படும் என்று அவர் கூறினார்.

மின்சார வாகனங்களின் பயன்பாடு அதிகரித்து வருவதை கருத்தில் கொண்டு கூட்டுறவு துறை சார்பில் சார்ஜிங் மையங்கள் திறக்கப்படும் என்றும் திரு பெரியகருப்பன் குறிப்பிட்டார்.

[]<<<>>>[]

திமுக ஆட்சியில் என்கவுண்ட்டர் செய்வது அதிகரித்துள்ளதாக அஇஅதிமுக பொதுச் செயலாளர் திரு எடப்பாடி பழனிசாமி குற்றம் சாட்டியுள்ளார்.

இது தொடர்பாக சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், தவறு செய்ததாக குற்றம் சாட்டப்படும் எவரையும் கைது செய்து முறையாக விசாரணை நடத்தி சட்டத்தின்முன் நிறுத்தப்பட்டு தண்டணை பெற்றுத்தர வேண்டும் என கூறியுள்ளார்.

காவல்துறையே சட்டத்தைக் கையில் எடுத்துக்கொண்டு தண்டனை வழங்குவது ஏற்புடையதல்ல என்று திரு எடப்பாடி பழனிசாமி தெரிவித்துள்ளார்.

[]<<<>>>[]

இணையவழி குற்றங்களினால் பொதுமக்கள் இழக்கும் பணத்தை துரிதமாக மீட்டு ஒப்படைக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென தமிழக காவல்துறை தலைவர் திரு சங்கர் ஜிவால், காவல்துறையினரை அறிவுறுத்தியுள்ளார்.

சென்னையில் காவல்துறை தலைமை அலுவலகத்தில் நடைபெற்ற இணையவழி குற்றப்பிரிவு காவல்துறையினருடனான ஆலோசனைக் கூட்டத்தில் பேசிய அவர், புகார்கள் பெறப்பட்டதும் உடனடியாக விசாரணையை தொடங்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

இணையவழி குற்றங்களை தடுக்க தொலைத் தொடர்புத்துறை, மத்திய இணையவழி குற்றத்தடுப்பு ஒருங்கிணைப்பு மையம், காவல்துறை ஆகியவை இணைந்து மேற்கொள்ளும் நடவடிக்கைகளையும் திரு சங்கர் ஜிவால் எடுத்துரைத்தார்.

[]<<<>>>[]

பசுமைத் தமிழகம் இயக்கத்தின் கீழ் மாநிலம் முழுவதும் 10 கோடி மரக் கன்றுகள் நடப்படும் என்று சுற்றுச்சூழல் துறை அமைச்சர் திரு மெய்யநாதன் தெரிவித்துள்ளார்.

புதுக்கோட்டை மாவட்டம் கவிநாடு பகுதியில் பனைவிதைகள் நடும் பணியை தொடங்கி வைத்த பின் செய்தியாளர்களிடம் பேசிய அவர், சுற்றுச்சூழலை பாதுகாக்க மாநிலத்தில் வனப்பரப்பு அதிகரிக்கப்பட்டு வருவதாகக் கூறினார்.

*( சவுண்ட்பைட் - மெய்யநாதன் ) ---43 செகண்ட்*

**[]<<<>>>[]**

விழுப்புரம் மாவட்டம் உளுந்தூர்பேட்டை அருகே நேற்று நேரிட்ட சாலை விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா இரண்டு லட்சம் ரூபாய் நிவாரண உதவி வழங்கப்படும் என முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின் அறிவித்துள்ளார்.

உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கல் தெரிவித்துள்ள அவர், காயமடைந்தவர்களுக்கு தலா 50 ஆயிரம் ரூபாய் வழங்க உத்தரவிட்டுள்ளார்.

**[]<<<>>>[]**

பள்ளி காலாண்டு விடுமுறை மற்றும் வார விடுமுறையையொட்டி சென்னையிலிருந்து மாநிலத்தின் பல்வேறு பகுதிகளுக்கு ஆயிரத்து 120 சிறப்புப் பேருந்துகள் இயக்கப்படும் என அரசு போக்குவரத்துத்துறை அறிவித்துள்ளது.

சென்னை கிளாம்பாக்கத்திலிருந்து திருவண்ணாமலை, திருச்சி, திருநெல்வேலி, கோவை, திருப்பூர் உள்ளிட்ட இடங்களுக்கு நாளை 395 பேருந்துகளும், சனிக்கிழமை 345 பேருந்துகளும் இயக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

சென்னை கோயம்பேடு பேருந்து நிலையத்திலிருந்து ஓசூர், பெங்களூரு உள்ளிட்ட இடங்களுக்கு சிறப்பு பேருந்துகள் இயக்கப்பட உள்ளதாகவும் போக்குவரத்துத்துறை தெரிவித்துள்ளது.

**[]<<<>>>[]**

தமிழகத்தில் ஒரு சில இடங்களில் இன்று லோசானது முதல் மிதமான மழை பெய்ய வாய்ப்பு உள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இதனிடையே சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் நேற்று இரவு பரவலாக மிதமான மழை பெய்துள்ளது.

காஞ்சிபுரம், திருவள்ளூர், செங்கல்பட்டு மாவட்டங்களின் ஒரு சில பகுதிகளிலும் பரவலாக மழை பெய்துள்ளது.

[]<<<>>>[]

ஈக்வடார் நாட்டின் வனப் பகுதிகளில் கடும் காட்டுத் தீ ஏற்பட்டுள்ளதை அடுத்து இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட வீரர்கள் தீயை அணைக்கும் பணிகளில் ஈடுபட்டுள்ளனர்.

[]<<<>>>[]

இங்கிலாந்தில் கடந்த சில நாட்களாக கன மழை பெய்து வருவதை அடுத்து அந்நாட்டின் பல பகுதிகளில் போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது.

[]<<<>>>[]

ராஜஸ்தான் மாநில முன்னாள் சட்டப் பேரவை உறுப்பினரும் பிஜேபி மூத்த தலைவருமான சூரிய காந்த வியாஸ் மறைவுக்குப் பிரதமர் திரு நரேந்திர மோடி இரங்கல் தெரிவித்துள்ளார்.

[]<<<>>>[]

பெங்களூரில் இந்திய சாலைகள் கூட்டமைப்பு சார்பில் நடைபெறவுள்ள சர்வதேசக் கருத்தரங்கை மத்திய சாலைப் போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு நிதின் கட்கரி இன்று தொடங்கி வைக்கிறார்.

[]<<<>>>[]

புதுதில்லியில் கார்ப்பரேட் விவகாரங்கள் துறை சார்பில் நடைபெற்ற அன்னையின் பெயரில் மரக்கன்று நடும் இயக்கத்தில் அத்துறைக்கான இணையமைச்சர் திரு ஹர்ஷ் மல்ஹோத்ரா பங்கேற்று மரக் கன்றை நட்டார்.

[]<<<>>>[]

பஞ்சாயத்துராஜ் சட்டம் தொடர்பான ஒரு நாள் தேசிய மாநாட்டை பஞ்சாயத்துராஜ் துறை இணை அமைச்சர் திரு எஸ் பி சிங் பாகேல் புதுத்தில்லியில் இன்று தொடங்கி வைக்கிறார்.

**[]<<<>>>[]**

சென்னையை அடுத்த பட்டாபிராம் பகுதியில் சுமார் 79 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள ரயில்வே மேம்பாலத்தை மாநில அமைச்சர் திரு ஆர் காந்தி நேற்று திறந்து வைத்தார்.

**[]<<<>>>[]**

தேனியில் பிரதமரின் கல்வி உதவித்தொகை திட்டத்தின் கீழ் முன்னாள் படைவீரர்கள் தங்கள் வாரிசு தாரர்களுக்கு கல்வி உதவித்தொகை பெற  வரும் நவம்பர் 11-ம் தேதிக்குள் விண்ணப்பிக்கலாம் என ஆட்சியர் திருமதி ஷஜீவனா தெரிவித்துள்ளார்.

**[]<<<>>>[]**

நாமக்கல்லில் மாவட்ட நிர்வாகமும், மாவட்ட முன்னோடி வங்கியும் இணைந்து நடத்தும் கல்விக் கடன் முகாம் இன்று நடைபெறும் என ஆட்சியர் திருமதி உமா கூறியுள்ளார்.

**[]<<<>>>[]**

திருவண்ணாமலை மாவட்டம் வழவச்சனூர் வேளாண் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் தேசிய தேனீ வளர்ப்பு இயக்கம் குறித்த கருத்தரங்கம் ஆட்சியர் திரு பாஸ்கர பாண்டியன் தலைமையில் நடைபெற்றது.

**[]<<<>>>[]**

சென்னையில் ஊர்க்காவல் படையினருக்கு விரிவுபடுத்தப்பட்டுள்ள பல்பொருள் அங்காடியில் பொருட்கள் வழங்கும் திட்டத்தை மாநகர காவல் ஆணையர் திரு அருண் தொடங்கி வைத்தார்.

**[]<<<>>>[]**

செஸ் ஒலிம்பியாட்டில் தங்கம் வென்ற இந்திய அணியினருக்கு  மூன்று கோடியே 20 லட்சம் ரூபாய் வழங்கப்படும் என இந்திய செஸ் கூட்டமைப்பு அறிவித்துள்ளது.

செஸ் ஒலிம்பியாட் போட்டியில் பங்கேற்ற வீரர்களுக்கு புதுதில்லியில் நடைபெற்ற பாராட்டு விழாவின்போது இந்திய செஸ் கூட்டமைப்பின் தலைவர் திரு நிதின் நரங் இதனை அறிவித்தார்.

ஆடவர் மற்றும் மகளிர் அணியில் பங்கேற்ற ஒவ்வொருவருக்கும் தலா 25 லட்சம் ரூபாயும், பயிற்சியாளர்களுக்கு தலா 15 லட்சம் ரூபாயும், துணை பயிற்சியாளருக்கு தலா ஏழரை லட்சம் ரூபாயும் வழங்கப்படும் என்று அவர் கூறினார்.

**[]<<<>>>[]**

ஐ எஸ் எல் கால்பந்துப் போட்டியில் நேற்றைய ஆட்டத்தில் பஞ்சாப் அணி இரண்டுக்கு — பூஜ்ஜியம் என்ற கோல் கணக்கில் ஹைதராபாத் அணியை வென்றது.

இன்றைய ஆட்டத்தில் சென்னை அணி - முகமதன் அணியை எதிர்கொள்கிறது.

**[]<<<>>>[]**